**களுத்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களுத்துறை நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் 2.2.1(ஆ) பந்தியின் பிரகாரம் முற்பெறுவனவுகள் கணக்கீடு செய்யப்படாமையை சரிசெய்வதற்காக மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்தில் வரவு வைத்து நடப்பாண்டின் வருமானத் தலைப்பில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமையின் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 781,827 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்குரியதாக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 38,508,455 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டுக்குரியதாக நிறுத்தி வைக்கப்பட்ட சம்பள மீளளிப்பு பெறுவனவு ரூபா 6,050,167 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மக்கள் வங்கியிலிருந்தும் சேமிப்பு வங்கியிலிருந்தும் 02 நிலையான வைப்புக்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 47,450 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் என்பன அதே அளவால் அதிகரித்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய 04 செலவின விடயங்களில் ரூபா 259,650 கூட்டுத்தொகையான செலவினம் ஆண்டின் செலவினமாகக் கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் என்பன அதே அளவால் குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,485,469 தொகையான மூலதன மானியம் மற்றும் மூலதனச் செலவினங்கள் மீண்டெழும் வருமானம் மற்றும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2015 ஆம் ஆண்டின் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த முறையே பெறுமதி ரூபா 2,000,000 மற்றும் ரூபா 16,695,000 தொகையான Foton Cab வாகனம் மற்றும் Foton பெகோ லோடர் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத Single drum Vibrating roller என்பவற்றின் உரித்தை சபைக்குக் கையேற்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 14,703,849 தொகையான கையிலுள்ள களஞ்சியப் பொருள் இருப்பிற்கான பட்டோலை சமர்ப்பிக்காமையினால் திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,755,710 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,778,582 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 32,233,369 தொகையான நிலுவை வருமானம் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255) அத்தியாயத்தின் 160, 165, 170 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 ஆதனவரி**

(அ) 2015 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு வருமானம் ரூபா 24,108,640 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரையில் அதில் ரூபா 14,865,586 தொகை அதாவது 62 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 26,711,621 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 9,707,276 தொகை அதாவது 36 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.3 கைத்தொழில் வரி**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கைத்தொழில் வரி மீதி ரூபா 36,950 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 13,250 தொகை அதாவது 36 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 களியாட்ட வரி**

---

2015 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு வருமானம் ரூபா 4,473,294 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 2,608,534 தொகை அதாவது 58 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.5 விருந்தினர் விடுதி வாடகை**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 745,035 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரையிலும் அதில் ரூபா 74,750 தொகை அதாவது 10 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.6 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

---

2014 நவம்பர் 14 ஆந் திகதிய 1889 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் களுத்துறை நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் பணிகளுக்காக ஏதாவது ஹோட்டலொன்று சிற்றுண்டிச்சாலையொன்று அல்லது தங்குமிடங்கள் என்பன இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பமொன்றில் 2015 ஆம் ஆண்டிற்கான அனுமதிபதப்பத்திரக் கட்டணமாக அந்த ஹோட்டலின் சிற்றுண்டிச்சாலையின் அல்லது தங்குமிடங்களில் 2014 ஆம் ஆண்டின் முழுமையாக வருமானத்தின் 1 சதவீதமான விதித்து அறவிடவேண்டியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1 சதவீத வரியை அறவிடுவதற்காக 05 தனியார் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை காணப்படாதிருந்ததுடன் உரிய கணக்காளர் நிறுவனம், நிதிக்கூற்றுக்களில் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் தகவல்களின் பிரகாரம் கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இந்த நிறுவனங்களில் 1 சதவீத வரியைக் கணிப்பிடுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வருமானம் தொடர்பாக கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு 1 சதவீத வரி அறவிட வேண்டிய போதிலும், தனியார் நிறுவனம் 2014 மற்றும் 2015 இன் முதல் 3 மாத காலப்பகுதிக்காக வருமானத் தகவல்களைச் சமர்ப்பித்திருந்தது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்குரிய வரி சரியான முறையில் கணிப்பீடு செய்யப்படவில்லை.

**2.2.7 நீதிமன்றத் தண்டப் பணம்**

---

வெளித்தரப்பினரின் பொறுப்பில் காணப்பட்ட சபையின் வருமானமான நீதிமன்றத் தண்டப்பணத்தை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு 2012 ஆம் ஆண்டு முதல் சபையினால் எந்த முயற்சியும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக பதிவேடொன்று சபையினால் பராமரிக்கப்படாமையினால், சபைக்குக் கிடைக்க வேண்டிய பணம் எவ்வளவு என தீர்மானிக்க முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 67,680 தொகையான கடன்மீதி கணக்காய்வுத் திகதியான 2016 சனவரி 20 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாது காணப்பட்டதுடன் மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி அறவிடுவதற்காக இருந்த கடன் மீதி ரூபா 362,920 ஆக இருந்தது.

(ஆ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரையும் உள்ளபடியான பதவியணியினரையும் பரீட்சித்த போது 2015 திசெம்பர் 31 ஆந் திகதி 18 ஊழியர்களில் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) சபையில் பிணை வைக்க வேண்டிய 48 ஊழியர்களிடமிருந்து அதன்படி பிணைப்பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2004 திசெம்பர் 15 ஆந் திகதிய LG/07/2004 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2 மணித்தியாலங்களை விட அதிகமான காலமாக திட்டமிடல் குழுக்கூட்டம் நடாத்தியிராத போதும் ரூபா 13,000 படி வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2002 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புப் பணம் தாமதமாகச் செலுத்தப்பட்டதன் அடிப்படையில் ரூபா 19,493 தொகையான மிகைக் கட்டணமொன்று 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பெகோ லோடர் ஒன்றும் உழவு இயந்திரமொன்றும் மற்றும் 2011 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வில் அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட 13 வாகங்கள் தொடர்பாகவும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

#### (அ) மகநெகும கிராமிய விதி

மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சின் 2009 திசெம்பர் 24 ஆந் திகதிய HM/MG/03/01/Gen ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 810,383 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 02 வீதிகளுக்கான நிதியினை மீளளிப்புச் செய்தல் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) களுத்துறை வடக்கு பன்சல வீதிக்கு தார் இடல்

களுத்துறை வடக்கு பன்சல வீதியின் இரண்டாவது குறுக்கு வீதி முதல் விவேகாராம வீதியின் மூன்றாவது குறுக்கு வீதி வரை வீதிக்கு தார்இட்டு மீளமைக்கும் செயற்திட்டத்திற்கு மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையின் காரணமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஆலோசனையின் அடிப்படையில் தற்காலிகமாகக்

கைவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தற்காலிகமாக வேலையினைக் கைவிடுவதற்கு முன்னர் செயற்திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிக்காக ஒப்பந்தகாரரினால் கொடுப்பனவு அறிக்கையும் அளவிடை அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தை மேற்பார்வை செய்த மற்றும் மதிப்பீட்டைத் தயாரித்த தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அவை பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தி சிபாரிசு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வேலையைப் பரீசோதித்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் மற்றும் களுத்துறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் என்பவர்களினால் நிர்மாணங்களின் பலவீனங்கள் அதிக அளவில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

### 3.4 வாகன பழுதுபார்த்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 செப்தெம்பர் 19 ஆந் திகதி திடீர் விபத்திற்குள்ளாகிய கலி பவுசரை பழுதுபார்ப்பதற்காக ரூபா 551,718 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும், காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 செப்தெம்பர் 24 ஆந் திகதி JCB இயந்திரம் கழிவுப் பொருள் தளத்தில் விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் பழுதுபார்ப்பதற்கு ரூபா 110,594 தொகையான மதிப்பீடொன்று தனியார் கம்பனியிலிருந்து கிடைத்திருந்த போதிலும், 2016 சனவரி 15 ஆந் திகதி வரையிலும் உரிய பழுதுபார்த்தல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) தண்ணீர் பவுசரின் எந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக சதொச மோட்டர்ஸ் இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது ரூபா 984,295 செலவில் புதிதாக எந்திரப் பகுதியொன்று மாற்றப்பட்டிருந்தது. மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்ப பொறியியலாளரின் சிபாரிசு இன்றி சதொச மோட்டர்ஸ் இன் மதிப்பீட்டின் பிரகாரம் இந்த பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) சுனாமி உதவியாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திலிருந்து கிடைத்த மஹிந்ரா வகையின் உழவு இயந்திரம் மற்றும் நிசான் வகையின் தீயணைப்பு வாகனம் என்பன கணக்காய்வுத் திகதியான 2016 சனவரி 15 ஆந் திகதி வரையிலும் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் சபையின் வாகனத் தளத்தில் துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.5 பயனற்ற சொத்துக்கள்

மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டம் 2007 இன் கீழ் நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்ட சுகாதாரப் பிரிவின் மூன்று மாடிக் கட்டிட நிர்மாணத்திற்காக 2016 சனவரி 12 வரையில் கீழ் மாடியின் அடித்தளம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அப்பகுதி வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக பயன்படுத்தப்படட்டிருந்ததுடன் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயனற்றுக் காணப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) வாகனக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) செயற்திட்டக் கட்டுப்பாடு
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு